# பூநகரி முகாமை அகற்ற இராணுவம் மறுப்பு!

பொது சன நூலகம் மாநகராட்சி மன்று 16-1-1995 யாழ்ப்பாணம்

விலை ரூபா 5-00

ஈழநாடு

EELANADU
NATIONAL TAMIL DAILY

மலர் 36 திருவள்ளுவர் ஆண்டு 2025 தை 1 இதழ் 345
யாழ்ப்பாணம் ஞாயிற்றுக்கிழமை 15-1-1995

(யாழ்ப்பாணம்)
போக்குவரத்துப் பாதை திறப்பதற்காக பூநகரி முகாமை அகற்றுவதற்கு படையினர் மதாடர்ந்தும் மறுத்து வருகிறுர்கள்.

நேற்றைய பேச்சின்போது பாதை திறப்பதற்கு பூநகரி படை முகாம் அகற்றப்பட வேண்டும் எனவும் அதற்கான அவசியம் பற்றியும் புலிகள்

(8ம் பக்கம் பார்க்க).

## பாதை திறப்பு குறித்து முடிவு எடுக்கப்படவில்லை

(யாழ்ப்பாணம்)
பூநகரிப் பாதை திறப்பது தொடர்பாக நேறறைய பேச்சுக்களில் தீர்மானங்கள் எதுவும் எட்டப்படவில்லை.

நேற்றைய சந்திப்பின் போது பூநகரிப் பாதையில் இருந்து படையினரை முற்ருக வாபஸ்பெற்று அந்தப்

(8-ம பக்கம் பார்க்க)

## 22 பொருட்களின் தடை நீக்க இணக்கம்

(யாழ்ப்பாணம்)
பொருளாதாரத்தடை விடயத்தில் 22 பொருட்களின் தடையை இன்று முதல் நீக்கு வதற்கு நாம் இணங்கியுள்ளோம். இவ்வாறு அரசு தரப்புப் பரதிநிதிகள் குழுத் தலைவர் திரு. பாலபத்தபெண்டி தெரிவித்தார்.

(8ம் பக்கம் பார்க்க)

# அரசு - புலிகள் இடையிலான 3-ம்கட்டப் பேச்சுவார்த்தை மக்களுக்கு நன்மை தரவில்லை!

## தமிழ்ச் செல்வன் தெரிவிப்பு

[யாழ்ப்பாணம்]

அரசுக்கும் – புலிகளுக்குமிடையிலான நேற்றைய 3ம் கட்டப் பேச்சுக்களில் மக்களுக்கு குறிப்பிடத்தக்க நன்மைகள் கிடைக்கும் விதத்தில் இணக்கம் எட்டப்படவில்லை, இப்பேச்சுக்கள் எதிர்பார்த்த திருப்தியை தரவில்லை இதுவரை நடைபெற்ற மூன்று கட்டப்பேச்சுக்கள் மூலமும் எதுவித முன்னேற்றமும் காணப்படவில்லை என விடுதலைப் புலிகளின் பிரதிநிதிகள் குழுவின் தலைவரும் தமிழீழ அரசியல் துறைபொறுப்பாளருமான திரு. சு. ப. தமிழ்ச்செல்வன் தெரிவித்தார்.

மூன்ரும்கட்ட பேச்சுக்களைத் தொடர்ந்து நடைபெற்ற உள்ளூர் பத்திரிகையாளர் மாநாட்டில் இதனை தெரிவித்த திரு. தமிழ்ச்செல்வன் மேலும் கூறுகையில்: மூன்று கட்ட பேச்சுக்களை நாம் நடாத்தியுள்ளோம், இதில் மக்களின் அன்ருட பிரசனைகள் தீர்க்கப்பட வேண்டுமென்பதை நாங்கள் வலியுறுத்தியுள்ளோம். இது நாங்கள் முதலில் முன்வைத்த கோரிக்கையல்ல. திருமதி சந்திரிகாவே இதனை முதலில் முன்

(8-ம் பக்கம் பார்க்க)

## அரசு பிரதிநிதிகள் போர் கைதிகள் சந்திப்பு

(யாழ்ப்பாணம்)
தமிழீழ விடுதலைப் புலிகளிடம் போர்க் கைதிகளாக இருக்கும் சிங்களப் பொலிசார் மற்றும் இராணுவச் சிப்பாய்கள் ஆகியோரை 3-ம் கட்டப் பேச்சுவார்த்தையில் கலந்து கொண்ட அரசு தரப்புப் பிரதிநிதிகள் சந்தித்து உரையாடினர்.

நேற்று மாலை பேச்சுவார்த்தை முடிவடைந்த பின்னர் இந்தச் சந்திப்பு இடம்பெற்றது.

இந்தச் சந்திப்பின் பின்னர்

(8ம் பக்கம் பார்க்க)

## அரசின் மீன்பிடி அறிவிப்பு உடன்பாட்டை மீறும் செயல்

(யாழ்ப்பாணம்)
வடபகுதிக் கடலில் மீன் பிடிப்பது தொடர்பான அரசின் அறிவிப்பானது மோதல் தவிர்ப்பு உடன்பாட்டை மீறும் செயலாகுமென விடுதலைப் புலிகள் பிரதிநிதிகள் அரச குழுவினரிடம் நேற்றைய பேச்சில் சுட்டிக்காட்டியுள்ளனர்.

மோதல் தவிர்ப்பு உடன்பாட்டில் ஜனுதிபதி சந்திரிகாவும், தேசியத் தலைவர் பிரபாகரனும் கைச்சாத்திட்டு இணக்கம் தெரிவித்த ஒப்பந்தப்படி படை முகாம்களிலிருந்து 600 மீற்றர் தவிர்ந்த ஏனைய பகுதிகளில் எந்நேரமும் மீன பிடிக்கலாம் என்பதேயாம்

(8-ம் பக்கம் பார்க்க)

## அபிவிருத்தி திட்டம் புலிகள் கையளிப்பு

(யாழ்ப்பாணம்)
வடகது கிழக்கு அபிவிருத்தி திட்டமொன்று தமிழீழ விடுதலைப் புலிகளிஞல் நேற்று அரச பிரதிநிதிகளிடம் கையளிக்கப்பட்டது.

இரண்டாம் கட்டப் பேச்சுக்களில் சிறிலங்கா அரசாங்கம் தெரிவித்த அபிவிருத்தித் திட்டங்களுக்குப் பதிலாக விடுதலைப் புலிகள் பொருளாதார மற்றும் புனர்வாழ்வு அபிவிருத் தித் திட்டக்கோவையைக் கையளித்தனர்.

இந்த அபிவிருத்தித் திட்டம் திணைக்கள தலைவர்களுடன் சேர்ந்து விடுதலைப் புலிகளால் தயாரிக்கப்பட்டது குறிப்பிடத்தக்கது. ரிசி

## அடுத்த கட்ட பேச்சு குறித்து முடிவு இல்லை

(யாழ்ப்பாணம்)
அரசு - புலிகள் இடையிலான அடுத்த கட்ட பேச்சுக்கள் குறித்து நேற்று எதுவித முடிவும் எடுக்கப்படவில்லை. இது தொடர்பாக தமிழீழ அரசியல்துறைப் பொறுப்பாளர் திரு. தமிழ்ச்செல்வன் தெரிவிக்கையில்; அடுத்த கட்டப் பேச்சுக்கள் பற்றி தீர்மானிப்பது அரசினுடைய கையில்தான் இருக்கிறது.

அடுத்தகட்டப் பேச்சுவார்த்தைகளை யாழ்ப்பாணத்தில்

(8-ம் பக்கம பார்க்க)

பொங்கல் வாழ்த்து

வாசகர்கள், விளம்பரதாரர்கள், முகவர்கள், அன்பர்கள், ஆதரவாளர்கள் அனைவருக்கும் எமது இதயம் கனிந்த பொங்கல் வாழ்த்துக்களைத் தெரிவித்துக்கொள்கிறோம்.

நிர்வாகி

## புனர்நிர்மாண வேலைகளுக்கு அதிகாரசபை நிறுவப்படும்

பாலபெத்த பெண்டி

(யாழ்ப்பாணம்)
மின்சாரம, பாதை வசதிகள், கல்வி, சுகாதார சேவைகள் ஆகியவற்றுக்கு முக்கியத்துவம் தெரிவிக்கப்பட்டால் அதன் வேலைத் திட்டம் ஒன்றை மேற்கொள்ள நாம் தயாராக இருக்கிறோம் என்று அரசகுழுத் தலைவர் திரு, பாலபெத்த பெண்டி தெரிவித்தார்.

நேற்று இடம்பெற்ற 3ம் கட்டப் பேச்சுவார்த்தையின் பின் பத்திரிகையாளர் மத்தியில் பேசுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் கூறியதாவது:

புனருத்தாரண வேலைகளை மேற்கொள்வதற்கு வசதியாக யாழ்ப்பாணத்தில் அதிகார சபை ஒன்றை நிறுவுவதற்கும் விடுதலைப் புலிகள் ஆலோசனை தெரிவித்துள்ளனர். அபிவிருத்தி அதிகார சபையை அரச பிரதிநிதிகளைக்கொண்டும் விடுதலைப் புலிகளின் பிரதிநிதிகளைக் கொண்டும் அமைப்பதற்கும் ஆலோசனை தெரிவிக்கப்பட்டுள்ளது,

(8-ம் பக்கம் பார்க்க)

## கண்காணிப்புகுழு யாழ். வருவதில் தாமதம்

(யாழ்ப்பாணம்)
மோதல் தவிர்ப்பு கண்காணிப்பு குழு யாழ்ப்பாணம் வருவதில் தாமதம் ஏற்பட்டுள்ளது.

மோதல் தவிர்ப்பு உடன்பாடு தொடர்பாக அரசிடமிருந்து சில விளக்கங்களை புலிகள் கோரியுளளதால் அதற்கான பதில் வந்த பின் வெளிநாட்டவர்களை தலைவர்களாக கொண்ட கண்காணிப்பு குழு இங்கு வருமென தெரிவிக்கப்படுகிறது,

கண்காணிப்பு குழு நடுநிலை

(8ம் பக்கம் பார்க்க)

தமிழ் மக்களின் நல்வாழ்வுக்கு பொங்கல் பண்டிகை உதயமாகட்டும்
அங்கத்தவர்கள், கூட்டுறவாளர் நுகர்ச்சியாளர் அனைவருக்கும்

எமது இனிய தைப்பொங்கல் நல்வாழ்த்துக்கள்

# வேலணை பல. நோ. கூ. சங்கம்

## யாழ்ப்பாணம்.

(எ 4690)

---

தைபிறந்தால் வழிபிறக்குமென்பர், எங்கள் வாழ்வும் வளமும் நலம் பெற
வாடிக்கையாளர்கள், அன்பர்கள், நண்பர்கள் யாபேருக்கும்
எமது பொங்கல் நல்வாழ்த்துக்கள்

நகரில் இனிப்பு பண்டங்கள், பிஸ்கட், கோப்பி, பவுடர், பெற்றோமக்ஸ் உதிரிப்பாகங்கள்
மொத்தமாகவும், சில்லறையாகவும் பெற்றுக்கொள்ளலாம்.

# குபேரன் களஞ்சியம்

## கேணலடிகிட்டு வீதி, (ஆஸ்பத்திரி வீதி) யாழ்ப்பாணம்

(எ-4689)

---

ஆண்டுகள் பல போனதடா அகிலம் போற்றும் பொங்கல்
ஈழத்தமிழர் நல்வாழ்விலும் புதிய மாற்றத்தை உருவாக்கட்டும்

இனிய தைப்பொங்கல் நல்வாழ்த்துக்கள்

சகலவிதமான ஆங்கில மருந்து வகைகளுக்கும் ஒரே இடத்தில் பெற்றுக்கொள்வதற்கு
★ நம்பிக்கையான ஸ்தாபனம் ★

# ஜீவா மருந்தகம்


வளாக வீதி
திருநெல்வேலி

---

வாடிக்கையாளர்கள் அனைவருக்கும் எமது இனிய

## பொங்கல் நல் வாழ்த்துக்கள்

கண்ணைக் கவரும் வர்ண நகைகளின் எழில் கோலம் — காலத்தால் அழியாத 22 கரட் தங்க நகைகளுக்கு
யாழ்ப்பாண மக்களின் நன்மதிப்புப் பெற்ற நாணயமான நகை வியாபாரிகள்
★ எமக்கு எங்கும் கிளைகள் இல்லை ★



# நதியா நகைமாடம்

02, சந்தோஸம் வீதி, யாழ்ப்பாணம்

(எ 4667)

---

மங்களம் பொங்கும் தைப்பொங்கல் வாழ்த்துக்கள்!

**உங்கள் ஆசைகளை கலை நுட்பத்துடன்**
**நவீன டிசைன்களில தங்க நகைகளை**
**நியாய விலையில் வழங்கும் ஒரே ஸ்தாபனம்**
**22 கரட் தங்க நகைகளுக்கு நகைக் கலைக்கூடம்**



# சோபனா நகை மாடம்

116 V, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

(எ-4668)

### மணிவாக்கு

அறியாமை தேயத் தேய துன்பம் தொலையும். அறிவு வளர வளர இன்பம் பெருகும். இந்த நுட்பத்தை அறியாமல் பலர் பொன்னாலும் பொருளாலும், இன்பத்தை வளர்க்க நினைக்கின்றார்கள். அது நெருப்பை நெய்யினால் அணைக்க முயல்வதைப் போன்றதாகும்.

— வாரியார்.

# தைப்பொங்கல் தமிழர் திருநாள்

தைப்பொங்கல் தமிழர் திருநாள். இத்திருநாள் கொண்டாடப்படும் முக்கியத்துவம் பற்றி நாம் சிந்திக்குமிடத்து மாரி ஆறு மாதமும் தட்சணாயனம் எனப்படும். மாரிகாலத்திலே மக்கள் பலவித கஷ்டங்களை அநுபவித்து வந்துள்ளார்கள். கோடைகாலம் ஆறுமாதமும் உத்தராயணம் எனப்படும். மழைக்காலத்திலே மக்கள் பட்ட கஷ்டங்களினின்றும் விடுபட்டுப் பல்வேறு சுகங்களைப் பெறுவார்கள், விவசாயி மாரிகாலத்திலே தான் விதைத்த நெல்லை அறுவடை செய்து கோடை காலத்திலே அதற்குரிய பலனைப் பெற்று மகிழ்வான். இதனால் சூரியவழிபாடு அவசியமாகின்றது. ''தைபிறந்தால் வழிபிறக்கும்'' இந்த முதுமொழியும் சான்று பகிர்கின்றது.

தைப்பொங்கல் பற்றி ஓர் காரணம் கூறப்படுகின்றது. போகி என்னும் பெயரையுடைய இந்திரனது கட்டளைப் பிரகாரம் உலகத்துக்கு மழை பொழியச் செய்து நன்மை செய்கின்ற காரணத்தினால் இந்திரனைக் குறித்துக் கொண்டாடப்படும் பண்டிகை எனவும் கூறப்படுகின்றது. அத்துடன் பூமாலை சூடிக் கொடுத்த நாச்சியார் மாதங்களுள் உதத மோத்தம மாதமாகிய மார்கழி மாதத்திலே முப்பது நாளும் விரதமிருந்து நாள் ஒன்றிற்கு ஒரு பாசுரம் வீதம் முப்பது பாசுரங்களைப் (திருப்பாவை) பாடி இறுதியில் பாமாலையால் ஸ்ரீமந் நாராயணனை மகிழச்செய்து கடைசியில் திருமணஞ் செய்த காரணத்தால் போகிப் பண்டிகை வந்தது என்றும் கூறப்படுகின்றது.

மேலும் இன்னுமோர் விதமாகவும் சொல்லப்படுகிறது. மாரிகாலத்திலே மனிதர்களையும், பசுக்களையும் ஓர் சத்தியானவன் பீடித்து இருந்தான் என்றும் அதனை ஈஸ்வரன் வதஞ் செய்து மனிதர்களையும் பசுக்களையும் காத்தருளினாரென்றும் அந்தத் துன்பத்தினின்றும் நீங்கிய சந்தோஷத்தைக் கொண்டாடப்படும் தினமே போகிப்பண்டிகை எனவும் செப்பப்படுகின்றது. பொதுவாக நோக்குமிடத்து மார்கழி முழுநாளும் விரதம் இருந்தவர்கள் உதத்ராயண புண்ணிய காலத்திலே நீராடிக் கடவுளை வழிபாடு செய்து ஆதவனைத் துதித்து அறுசுவைகளுடன் கூடிய உணவை உட்கொண்டு சந்தோஷமாக வாழவேண்டிய தினம் என்பது புலனாகின்றது.

### சிவஸ்ரீ சிவகடாட்ச கணேசலிங்க குருக்கள்

## நமது நோக்கு

### தமிழர் திருநாள்

தைப்பொங்கல் விழா ஒரு சமயப் பண்டிகையாக, புராணக்கதைகள் சேர்ந்த ஒரு போகிப் பண்டிகையாக மாறிவிட்டது.

ஆனால்— அது ஓர் உழவர் நாளென்றும், தமிழர் திருநாளென்றும், சூரியனுக்கு நன்றிக்கடன் செலுத்தும் நாளென்றும் இன்று எல்லோராலும் ஏற்றுக் கொள்ளப்பட்டிருக்கிறது.

தமிழகத்திலே திராவிடர் இயக்கம தமிழர் தம் பெருமையை நினைவூட்டி நிலைநாட்டும் பணியில் இருந்தபோது, புதிய கண்ணோட்டத்தில், புதிய ஆய்வுகளோடு விழாக்களுக்கு விளக்கம் தந்தார்கள்.

உலகத்தவர்களுக்கு சூரியசக்தி பலவகையாலும் பயன்படுகிறது.

எனவே — வெவ்வேறு காரணங்களைக் கூறி, வெவ்வேறு சமய தத்துவங்களின் அடிப்படையில் சூரியன் போற்றப்பட்டிருக்கிறான்; வழிபாடு நடைபெற்றிருக்கிறது.

பல நாடுகளில் - சூரியனுக்குச் கோவில் இருந்ததாக அகழ்வாராய்ச்சிச் சான்றுகள் உண்டு.

இயற்கையைப் போற்றி அதனோடு இசைந்த வாழ்ந்த தமிழனும், இயற்கையின் ஓர் அம்சமான சூரியனைப் போற்றியது வியப்பில்லை.

இன்று- இயற்கையோடு அளவுக்கு மீறிச் சுரண்டத் தொடங்கிய காரணத்தினால் இயற்கை சீற்றம் கொண்டிருக்கிறது.

ஓசோன் படலத்தில் ஓட்டை ஒன்றும், காடழிப்பால் மழை குறைந்து விட்டதென்றும் அலறியடித்துக்கொண்டு சூழல் பாதுகாப்புக்கு எல்லா நாடுகளிலும் தனிஅமைச்சுக்களே நிறுவப்பட்டுள்ளன என்பதை மறுப்பவர் யார்?

காலமாற்றங்களை கணித்துப் பார்த்து அதற்கேற்ற வகையில் வாழ்வை அமைத்துக் கொண்டவன் தமிழன்.

மகரராசிக்குச் சூரியன் காலடி வைக்கும் தைத் திங்கள் முதலாம் நாள் புதிய காலநிலையைக்குறிக்கும் நாள்.

அரசியலிலும் - புதிய காலநிலை தோன்றும் என்ற நம்பிக்கையோடு இன்று பொங்கி மகிழ்கிறார்கள்.

தமிழர் திருநாள் பொலிந்திட ''ஈழநாடு'' வாழ்த்துகிறது.

## இன்று

(பருத்தித்துறை)

பொலிகண்டி பாரதி விளையாட்டுக் கழகத்தின் 36வது வருடாந்த இல்லவிளையாட்டுப் போட்டி நாளை 15ம் திகதி கொற்றாவத்தை அ. மி. த. க. பாடசாலை விளையாட்டு மைதானத்தில் நடைபெறுகின்றது நிலையத்தலைவர் திரு. ரி,கங்காபதி தலைமையில் நடைபெறும் இவ்விளையாட்டுப் போட்டியிலும் சரிசளிப்பு விழாவிலும் வடமராட்சி வடக்கு பிரதேச செயலர் திரு. ஆ. சிவசுவாமி பிரதமவிருந்தினராகக் கலந்து கொள்வார். [52]


வாடிக்கையாளர்கள் நண்பர்கள் அனைவருக்கும் எங்கள் இனிய

## பொங்கல் வாழ்த்துக்கள்

- ஃ இமிடேஷன் கோல்ட் கவரிங் நகைகள்
- ஃ மணப் பெண்களின் சோடனை நகைகள்
- ஃ வெளிநாட்டு அழகு சாதனப் பொருட்கள்
- ஃ சிறுவர் விளையாட்டுப் பொருட்கள்
- ஃ லேஸ், நூல் வகைகள்
- ஃ சுவர்க்கடிகாரங்கள், கைக்கடிகாரங்கள்
- ஃ சிறுவர்களின் பாவனைப் பொருட்கள்
- ஃ மேசை விரிப்புகள்
- ஃ பூச்சாடிகள்

அத்தனையும் உங்கள் எண்ணம்போல் தெரிவு செய்து கொள்ள நாடவேண்டிய ஒரே இடம்

## ஜெயா அழகு மாடம்

மொத்த வியாபாரம்:

187, இராசன் வீதி,
[மின்சார நிலைய வீதி]
யாழ்ப்பாணம்.

சில்லறை வியாபாரம்:

17 7 ஏ, இராசன் வீதி,
[மின்சார நிலைய வீதி]
யாழ்ப்பாணம்.

மங்கையரே: எம்மிடம் தலைநகை வாடகைக்கு உண்டு.

(எ- 4678)



மங்களம் பொங்கிடும் மனைசிறக்க,
பொங்கலோ பொங்கலென வாயார கூறி

## வாழ்த்திடுவோம்




## அண்ணா
## தொழிலகம்

இணுவில் – யாழ்ப்பாணம்
சுன்னாகம் – திருநெல்வேலி.

(எ- 4685)



★ தைபிறந்தால் வழிபிறக்கும் என்பார்கள் எம் மக்கள்
சகல உரிமைகளும் பெற்று சுதந்திரக்காற்றை சுவாசிக்க

## இனிய பொங்கல் நல்வாழ்த்துக்கள்

பசளைவகைகள், தெளிகருவிகள், நீர்இறைக்கும் யந்திரங்கள், விவசாய உற்பத்தி உபகரணங்கள், மரக்கறி விதைகள், நல்லின நெல்விதைகள், தட்டச்சு இயந்திரம், துவிச்சக்கர வண்டிகள், மின்பிறப்பாக்கிகள் கால்நடை உணவுகளுக்கு ஒரே ஸ்தாபனம்

# யாழ். மாவட்ட விவசாய உற்பத்தி சந்தைப்படுத்தல் - நுகர்ச்சி கூட்டுறவுச் சங்கங்களின் சமாஜம்

## இல. 111 பிரதான, வீதி யாழ்ப்பாணம்.

அத்தியாவசிய பொருட்களுடன் நுகர்ச்சிப்பொருட்களும் லொறி மூலமும் கப்பல் மூலமும் தருவிக்கப்பட்டு அங்கத்துவ சங்கங்களாகிய மாவட்டத்திலுள்ள பலநோக்கு கூட்டுறவுச் சங்கங்களுக் கூடாக மக்களுக்கு விநியோகிக்கும் நிறுவனம்

(ஏ-4687)

இதயம் கனிந்திடும் இதயதாக
பொங்கல் நல் வாழ்த்துக்கள்
ரோயல் இன்டஸ்றீஸ்
நறுமணமிக்க தயாரிப்பு
ரோயல் ரோஸ் ராஸ்கம் பவுடர்
தீபா ரோஸ் ராஸ்கம் பவுடர்

★ புதிய நறுமணமிக்கது
★ அதிக எடையுடையது
★ குடும்பம் முழுவதும் பாவிக்கக்கூடியது
★ விலை மலிவானது
★ எவராலும் தரமானது எனப் பாராட்டப்படுவது

அழகிய காள்கலன்களில்
எங்கும் விற்பனையாகின்றது.

வியாபாரிகளிடம் கேட்டுப்
பெற்றுக்கொள்ளுங்கள்.

தயாரிப்பாளர்களும், விற்பனையாளர்களும்:
ரோயல் இன்டஸ்றீஸ்
பொன்னையா ஒழுங்கை,
வண்ணார்பண்ணை வடமேற்கு,
ஆனைக்கோட்டை.
(எ 4684)

# தைப்பொங்க

## பொங்கல் சூரியபகவானுக்கு செலுத்தும் நன்றிக் கடன்

இன்று மாதப் பிறப்பு. தைப் பிறப்பு. மங்கலமாக எல்லோராலும் மகிழ்ச்சியோடு வரவேற்கப்படுவது பொங்கும் பால் போல எல்லா இதயங்களிலும் நல்வாழ்வும் நல்லெண்ணமும் இன்பமும் பொங்கிப் பூரிப்பதாக.

தைப்பொங்கல் சூரியனுக்குச் செலுத்தும் நன்றிக் கடனேயாகும். வயலில் நெல் விளைவதற்குத் தண்ணீரும் வேண்டும். தண்ணீரை வற்றச் செய்யவும் வேண்டும் இரண்டிற்கும் மூலகாரணம் சூரியனே. உழவர்கள் சூரியனுக்குச் செலுத்தும் வணக்கமோ என்றால் வயலின் விளைவைப் பயன் கொள்பவர்கள் எல்லோருமே ஞாயிற்றைப் போற்றுதல் செய்தல் வேண் ம். அதனால் தான் உழவர்கள் அல்லாதவர்களும் மகிழ்ந்து பொங்கல் படைத்துச் சூரியனை வழிபாடு செய்கிறோம்.

அடுத்த நாள் பெசு ஓம்பல் விழா, பசுவின் அருமையும் பெருமையும் சொல்லுக்குள் அடங்காது. எருது வயலிலே உழுகிறது. நெல் விளைந்தபின்னர் நெல் மணியையும் வைக்கோலையும் வேறுபடுத்துகிறது.

**சிவ சண்முகவடிவேல்**

வயலிலே இருந்து நென்மணியை இல்லத்திற்கு எடுத்து வர உதவுகிறது, பயிர் விளைவதற்குப் பசளையைத் தருகிறது. இவ்வளவு சேவைக்கும் எருது பெற்றுக் கொள்வது நமக்கு உதவாத வைக்கோலையே.

அதேபோலப் பசுவும், நமக்கு உதவாத புல்லையும், வைக்கோலையும் உணவாகக் கொண்டு எகக்குக் குழந்தை முதல் வயோதிபர் வரை உணவாகக் கொள்ளத்தக்க இனிய பாலைத் தருகிறது. நெய்யைத் தருகிறது. மோரை தருகிறது.

பாலைக் காய்ச்சி நெய்யை உருக்கி மோரைப் பெருக்கி உண்போமேயானால் உடம்பு பேணப்படும். உள்ளம் மலரும்.

இறைவன் திருமுழுக்காடுவதற்குரிய பஞ்சகௌவியங்களையும் தரும் ஆவும் போற்றிப் பேணிப் பாதுகாத்துக் கொண்டாடப்படுவது அறத்தைப் பேணுவது போலாகும்.

உங்கள் வாழ்வில் ஒளி வீச அனைவருக்கும்
பொங்கல் வாழ்த்துக்கள்
★ அலங்கார அழகுசாதனப் பொருட்கள் ★ எவர்சில்வர் பொருட்கள்
★ பாடசாலை மாணவர்களுக்கான பாக்குகள் Bags ★ லேஸ் நூல் வகைகளுக்கு
இராஜேஸ்வரி களஞ்சியம்
வளாகச் சந்தி, திருநெல்வேலி.
(எ 4677)

மனம்போல் அமைதியான சூழ்நிலையில் இன்சுவை
குளிர்களி வகைகளை சுவைத்து மகிழ்ந்திடுவதற்கு
உங்களை வருக! வருக!! வருக!!! என அழைத்திடும் நிறுவனம்
தைப்பொங்கல் நல்வாழ்த்துக்கள்
லிங்கம் குளிர்களி நிலையம்
(லிங்கம் கூல்பார்) வெலிங்டன் சந்தி
யாழ்ப்பாணம்.
[ஏ—4692]

வாடிக்கையாளர்கள்' நண்பர்கள், அன்பர்கள் அனைவருக்கும்
எமது இனிய பொங்கல் வாழ்த்துக்கள்
லேடன் புடவை நிலையம்
(தீவகம்)
249, இராசன் வீதி, [மின்சாரநிலைய வீதி] யாழ்ப்பாணம்.
]ஏ-4673)

எங்கள் எல்லோருக்கும் பொங்கல்...
கணேசன்
★ பொங்கல் ந
★ முகூர்த்தப் பட்டுப்பி
கணேசன்
[ கணேச
201, காங்கேசன்துறை

# ல் சிறப்புமலர் ★

## வாழ்வு அளிப்பாய்

ங்களம் இனிதுறப் பொங்கவும்
றம் பெற்றே விளங்கவும்
லகியொரு காலை மலரவும்
யகர் கனவுகள் பலிக்கவும்
பர்கள் யாவும் அகலவும்
தமிழர் தாயகம் பிறக்கவும்
திருநாளே பொலிவுடன் வாராய்
ழ் மாந்தர்க்கு புதுவாழ்வு அளிப்பாய்.

— அரியாலையூர் ஐ. குமரதாசன்.


★ சூரியபகவானுக்கு பொங்கல் இடும்நாள்
அனைவருக்கும் சுபீட்சம் தரும் நன்நாள்
வாழ்த்துக்கள் எங்கும் ஒலிக்கட்டும்
சகல உணவுப் பொருட்கள்
சஞ்சிகைகள் தினசரிகள்
அனைத்தையும்
குறைவின்றி பெற்றுக்கொள்ள
ஒரே ஸ்தாபனம்

**சிவன் களஞ்சியம்**

[சிவன் ஸ்ரோர்ஸ்]
பரமேஸ்வரா சந்தி, திருநெல்வேலி.
[எ- 4679]



**மீசாலை சோழன் விற்பனைப் பகுதி**

**இடமாற்றம்**

சோழன் அரிசி ஆலை மீசாலையில் சேவை வழங்கிய சோழன் நெல் அரிசி வாணிப விற்பனைப்பகுதி இன்றுமுதல் [15-01-95] கண்டி சாலை சாவகச்சேரி என்ற முகவரிக்கு மாற்றம் செய்யப்படுகின்றது என்பதை
அன்பர்கள்
ஆதரவாளர்கள்
வாடிக்கையாளர்கள்
அனைவருக்கும் மகிழ்ச்சியுடன் அறியத்தருகின்றோம்.

**சோழன்**
**நெல் அரிசி வாணிபம்**
கண்டி சாலை, சாவகச்சேரி.
(எ-4697)



## ழ்க பொங்கல்

மூலப் பொருட்களை
திக்கு எடுப்போம்
உற்பத்திக்கு
கொடுப்போம்
க உடல் நலத்திற்கு
மும், சூரிய நமஸ்காரமும்
சய்யுங்கள்.



ற் சோப் - சலவைப்
பற்று உறைகளைச்
து — யோகாசனப்
, புத்தகத்தையும்
வக்கொள்ளுங்கள்

**மிக்வைற்"**

[எ-4694]



● மக்கள் நல்வாழ்வில் தைப்பொங்கல் மகிழ்ச்சிகரமாக அமைய இறைவனைப் பிராத்திப்போம்
நண்பர்கள் வாடிக்கையாளர்களுக்கு எமது மனம் உவந்த
பொங்கல் வாழ்த்துக்கள்

# சிவகுமார் களஞ்சியம்

**(சிவகுமார் ஸ்ரோர்ஸ்)**

282, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
(எ-4675)



ளர்கள், நண்பர்கள் அனைவருக்கும்
எங்கள் இனிய
பொங்கல் வாழ்த்துக்கள்''
எங்கள்

**V. S. P.**

**சல் நல்லெண்ணை**

வரத்து சீர் இல்லாமையால்
தற்பொழுது
ல் மாத்திரம் விற்பனைக்கு உண்டு,
பாவிலோ கொழும்பிலோ
பொழுது விற்பனையாகும்
P. ஸ்பெசல் நல்லெண்ணைக்கும்
எங்களுக்கும்
தொடர்பும் இல்லை என்பதைப்
பாளருக்கு அறியத்தருவதுடன்
க்கு வரத்து சீர்வந்ததும்
பாவிலும், கொழும்பிலும்
ம் வர்த்தக ஸ்தாபனங்களை
திரிகையில் அறிவிப்போம்.

**ளா ஸ்ரோர்ஸ்**

A, மானிப்பாய் வீதி,
யாழ்ப்பாணம்.
[சி-1371]



வாடிக்கையாளர்கள் அன்பர்கள் யாபேருக்கும்
**எமது இனிய பொங்கல் நல்வாழ்த்துக்கள்**
பொங்கல் வாழ்த்து அட்டைகள், கலண்டர் வகைகள், பொக்கற் டயறிகள்.
மேசை டயறி வகைகள், காரியாலய, பாடசாலை உபகரணங்கள் விற்பனையாகின்றது.
மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக்கொள்ளலாம்
திரு. த. சத்தீஸ்வரன் எழுதிய "சேதன இரசாயனம்" புத்தகமும் விற்பனையாகின்றன.

**ஸ்ரீலங்கா புத்தகசாலை (ன்) அச்சகம்**

234, காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம்.
(எ-4692)



எங்கள் மீது அபிமானம் கொண்ட அனைத்து வாடிக்கையாளர்களுக்கும் தைத் திருநாளில் இன்சுவைப்
**பொங்கல் நல் வாழ்த்துக்கள்**
● பாடசாலை உபகரணங்கள் ● காகிதாதிகள் ● கண்ணைக் கவரும் வாழ்த்து மடல்கள்
● இலக்கிய, சமய தத்துவ நூல்கள் அனைத்துக்கும் மொத்த சில்லறை வியாபாரிகள்.

# பாலாஜி பொத்தகசாலை

வண்ணார்பண்ணை, யாழ்ப்பாணம்.
(எ 4683)



வாடிக்கையாளர்கள், அன்பர்கள் அனைவருக்கும்
**எமது இனிய பொங்கல் நல்வாழ்த்துக்கள்**
● 35 வருடங்களாக வானொலி, ரி.வி. பழுதுபார்ப்பதிலும், சீர்செய்வதிலும் நம்பிக்கையின் முன்னோடிகள்.

# வானொலிமனுவல்

121, அருச்சுன வீதி, [ஸ்ரான்லி வீதி] யாழ்ப்பாணம். (எ4693)


ர அமைப்பு : க. பரமசாமி


ஆடிப்பாடி மகிழ்ந்திடும் நன்நாளில்
னத்தாரின்
ாழ்த்துக்கள் ★
க்கு கைராசியான நிறுவனம் ★

**டவையகம்**

ரோர்ஸ் ]
தி, யாழ்ப்பாணம்.



அனைவருக்கும் இனிய பொங்கல் நல்வாழ்த்துக்கள்
**விழி உங்களிடம் ஒளி எங்களிடம்**
★ வருகை தாருங்கள் ★

# எரிக் கணேஷ்

566. ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்
(ஏ-4674)

அனைவருக்கும் இதயம் பொங்கும் இனிய பொங்கல் நல் வாழ்த்துக்கள்!

# சோபிதா

பாடசாலை அலுவலக உபகரணங்கள் மொத்த சில்லறை விற்பனையாளர்கள்
363, காங்கேசன் துறை வீதி,
யாழ்ப்பாணம்.

[எ4672]

---

வாடிக்கையாளர்கள், அன்பர்கள், நண்பர்கள், உறவினர்கள், அனைவருக்கும்
எமது இனிய பொங்கல் நல் வாழ்த்துக்கள்!

சேட்டிங், சூட்டிங், சாறிகள், பிளவுஸ் வகைகள் மற்றும் கோவில் தேவைகளுக்குரிய
குடை, கொடி, ஆலவட்டம், வாகை மாலை என்பவற்றுக்கும் சிறந்த ஸ்தாபனம்

# ஞானம் ஆடையகம்

54, சோதியா தெரு,
யாழ்ப்பாணம்.

(எ-4671)

---

ஆண்டின் இறுதியோடு அவலங்கள் போய் மறையும்! ஆனந்தப் பெருவெள்ளம்
அனைவருக்கும் பாய்ந்துவரும் இனிய பொங்கல் நல்வாழ்த்துக்கள்!

திருநெல்வேலி மக்களின் நன்மதிப்பு பெற்ற ஆங்கில மருந்து வகைகளின் களஞ்சியசாலை

# குறிஞ்சி மருந்தகம்

வளாக சந்தி,
திருநெல்வேலி.

## (குறிஞ்சி மெடிக்கல்ஸ்)

(எ-4670)

---



வாடிக்கையாளர்கள் அன்பர்கள் அனைவருக்கும்

## எமது இனிய பொங்கல் வாழ்த்துக்கள்!

சின்னச் சின்ன ஆசைகளை வண்ண வண்ண, உன்னத கலைநயம்மிக்க
நகைகளை உங்கள் எழில்மிகு கோலத்திற்கேற்ற அதிநவீன மோஸ்தர்களில்
தரம் குன்று தங்கப் பவுண் நகைகளாக செய்து பெற்றிட வாரீர்!

# சிறி நதியா நகை மாடம்

2 G, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.

(எ-4666)

---

**விடிவை நோக்கும் அனைவருக்கும் மங்களம் பொங்கும் பொங்கல் நல் வாழ்த்துக்கள்!**

விசேட சுபகாரியங்களுக்குத் தேவையான பனாரிஸ், காஞ்சிபுரம், மைசூர் சில்க், பெங்களூர் சில்க்,
பட்டு வேட்டிகள் சேட்டிங், சூட்டிங் அனைத்துப் புடவைத் தினுசுகளுக்கு
யாழ்ப்பாண நகரில் பெயர் பெற்ற ஸ்தாபனம்

# திருமாட்டி புடைவைக் கடல்

122, மின்சார நிலைய வீதி, (மேல் மாடி) யாழ்ப்பாணம்.

(எ-4669)

---

மக்கள் நல்வாழ்வில் தைப்பொங்கல் மகிழ்ச்சிகரமாக அமைய இறைவனைப் பிரார்த்திப்போம்
அங்கத்தவர்கள், கூட்டுறவாளர்கள், நுகர்ச்சியாளர் அனைவருக்கும்

## எமது மனம் உவந்த

## பொங்கல் வாழ்த்துக்கள்

# பண்டத்தரிப்பு பரிஷ் பல. நோ. கூ. சங்கம்

(எ-4691)

# எங்குமே மங்கலம் தங்குக

# பானைகள்

# உங்களின் முற்றத்தில் பொங்குக

**கிளைகள்:**

## சோழன்
நெல் அரிசி வாணிபம்
பலாலிசாலை – திருநெல்வேலி

## சோழன்
நெல் அரிசி வாணிபம்
பருத்தித்துறைசாலை–நெல்லியடி

## சோழன்
நெல் அரிசி வாணிபம்
கண்டிசாலை–சாவகச்சேரி

## சோழன்
நடமாடும் விற்பனை நிலையம்
திருநெல்வேலி

**கிளைகள்:**

## சோழன்
அரிசி ஆலைகள்

## சோழன்
அரைக்கும் ஆலைகள்

## சோழன்
கல்லுடைக்கும் ஆலைகள்

## சோழன்
சாக்கு கொள்வனவு நிலையம்
சிவலிங்கப்புளியடி. – யாழ்ப்பாணம்

அற்புத மொன்றிங்கு நிகழ்ந்தது பகைவனின்
அடக்கு முறையெலாம் தகர்ந்தன
முற்றிச் சரிந்தது நெல்வயல்; தமிழரின்
முற்றத்தில் பானைகள் பொங்கின
வற்றிடா ''சோழனின் வாணிபம்'' எங்கும்
வாசற் கதவுகள் திறந்தன.
இத்தினம் பொங்கல் நல்வாழ்த்துக்கள் உங்கள்
இல்லத்தில் மங்கலம் தங்குக.

# சோழன் நெல் அரிசி வாணிபம்

(ஏ 4696

## புனர் நிர்மாணவேலைக்கு

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

அரசியல் தீர்வு சம்பந்தமான பேச்சு வார்த்தைகளை ஆரம்பிப்பதற்குமுன் இடையில் எத்தனை பேச்சுவார்த்தைகள் நடைபெறும் என வரையறுத்துக் கூறமுடியாது. ஆனால் கூடியவிரைவில் அரசியல் தீர்வு சம்பந்தமான பேச்சு வார்த்தைகளை ஆரம்பிக்கலாம் என எதிர்பார்க்கிறோம்.

மோதல் தவிர்ப்பு தொடர்பான ஒருவார அனுபவம் குறித்து நாம் இந்தப் பேச்சு வார்த்தையில் ஆராய்ந்தோம். இந்த ஒப்பந்தம் திருப்திகரமாக இருபகுதியினராலும் கடைப்பிடித்து வருவது குறித்து இருதரப்பினரும் முழு திருப்தி கொண்டுள்ளோம்.

அபிவிருத்தித் திட்டங்கள் குறித்தும் ஆராய்ந்தோம். நாம் அபிவிருத்தித் திட்ட அறிக்கை ஒன்றையும் சமர்ப்பித்தோம். இதனையடுத்து விடுதலைப் புலிகள் பொருளாதாரத் திட்டம் ஒன்றை எமக்குச் சமர்ப்பித்தனர்.

இந்தப் பொருளாதாரத் திட்ட அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருக்கும் ஆலோசனைகளை செயல்படுத்த நாம் தயாராக உள்ளோம்.

பாதை திறப்பு குறித்து நாம் தொடர்ந்தும் ஆராய்ந்து வருகிறோம்.

ஆனையிறவு, பூநகரி ஆகிய இரு பாதைகள் விடயத்திலும் இரு தரப்பினரும் இணங்கியிருக்கின்றோம் ஆனால் இந்த இரு பகுதிகளிலுமுள்ள இராணுவ முகாம்களை எந்த அளவு தூரத்துக்கு நகர்த்தலாம் என்பது தான் இப்போது ஒரு பிரச்னையாக உள்ளது.

இந்த பிரச்னை தொடர்பாகவே நாம் மேலும் பேச வேண்டியுள்ளது. விடுதலைப் புலிகளும் தமது தலைவர்களுடன் இதுபற்றிப் பேசி ஆராய்ந்து எமக்கு முடிவுகளை தெரிவிக்குமாறும் கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளது.

நாம் நமது தலைவர்களுடனும், அரசாங்கத்துடனும் பாதைப் பிரச்னை குறித்து பேசி ஒரு முடிவுக்கு வருவோம்.

பாதைகள் சம்பந்தப்பட்ட இராணுவ முகாம்களை முற்ருக அகற்றவும் நிலைப்பாட்டிலேயே புலிகள் இருந்தாலும் இது குறித்து அவர்கள் தமது தலைவர்களுடன் பேசி முடியுமானல் ஒரு இணக்கத்துக்கு வருவார்கள்.

பாதை திறப்பு பொருளாதாரத் தடைநீக்கம் பற்றி ஆராய்ந்து முடிவு எடுக்கும் வரையில் அரசியல் தீர்வு பற்றி பேசமாட்டோம் என புலிகள் தெரிவிக்கவில்லை- ஆனல் இந்த இரு விடயங்கள் குறித்தும் மேலும் பேசுவதற்கே அவர்கள் விரும்புகின்றனர்.

இந்த இரண்டு விடயங்கள் குறித்தும் திருப்திகரமாக ஆராயப்படும்போது அரசியல் தீர்வு சம்பந்தமாக பேச்சுக்கள் ஆரம்பமாகும்.

ஆனல் பேச்சுவார்த்தையை நாம் பிற்போட முடியாது. கூடிய விரைவில் இதற்கு தீர்வுகாணவேண்டும். ஆனல் இதற்கு ஒரு குறிப்பிட்ட திகதியை புலிகளும் கேட்கவில்லை. நாமும் அதற்கு ஒரு திகதியை எடுக்கமுடியாமல் போய்விட்டது. குறிப்பாக இரண்டு விடயங்களில் ஒரு முடிவை எடுக்கமுடியாமல் போய்விட்டது. ஏனெனில் இவை இரண்டு குறித்தும் மேலதிகமாக பேசவேண்டியிருக்கிறது.

இன்றைய பேச்சுவார்த்தை நல்லதொரு சிநேகபூர்வமான சூழ்நிலையில் நடைபெற்றது.

அடுத்த கட்டப் பேச்சு வார்த்தை மிக விரைவில் நடாத்தப்படும். இந்தப் பேச்சுவார்த்தைக்காக சில வேளைகளில் நாம் யாழ்ப்பாணத்துக்கு வரவேண்டியிருக்கும் என்ருர்.

# மோதல் தவிர்ப்பு ஒப்பந்தம்; நடைமுறைப்பிரச்னை பற்றி அரசு - புலிகள் ஆலோசனை

(யாழ்ப்பாணம்)

நேற்றைய 3ம் கட்டப் பேச்சு வார்த்தையின்போது மோதல் தவிர்ப்பு ஒப்பந்த நடைமுறையில் உள்ள பிரச்னைகள் சம்பந்தமாக இரு தரப்பும் கலந்தாலோசித்தனர்,

மக்களின் அன்ருட பிரச்னைகளான பொருளாதாரத் தடைநீக்கம், பாதை திறப்பு சம்பந்தமாக இரு தரப்பு கருத்துக்களும் பரிமாறப்பட்டன. இதில் கிழக்குமாகாணத்தில் மோதல் தவிர்ப்பு உடன்பாட்டு அமுலிலுள்ள பிரச்னைகள், மற்றும் கடற்ருெழிலாளர் மீன்பிடிப்பது சம்பந்தமாகவும் ஏற்பட்டுள்ள பிரச்னைகளை அரச தரப்பினருக்கு விளக்கப்பட்டது.

இவைதொடர்பானபிரச்னைகளுக்கு தாங்கள் மிகவிரைவில் ராணுவத்தினருடன்பேசி அதற்கான முடிவை விரைவில் அனுப்புவதாக அரசு தரப்பினர் தெரிவித்துள்ளனர்

நேற்றைய பேச்சுக்களின் போது இருதரப்பும் பல பிரச்னைகள் குறித்து மனம் விட்டுப் பேசினரே தவிர எதுவித உடன்பாட்டுக்கும் வரவில்லை.

மேலும் பொருளாதாரத் தடையினல் வடபகுதி மக்கள் எதிர்நோக்கும் பலபிரச்னைகள் முன்பு தடை நீக்கப்பட்ட பொருட்கள் வராமை உட்பட பல பிரச்னைகள் பற்றியும் அரச குழுவினருக்கு சுட்டிக் காட்டப்பட்டது, இவை பற்றித் தாங்கள் கவனத்தில் எடுப்பதாகவும் இவை பற்றியெல்லாம் தமது தலைமைப் பீடத்துடன் பேசி அடுத்த கட்டப் பேச்சுக்கு வரும்போது தீர்க்கமான முடிவுடன் வருவதாக கூறினர்.

-சி-ம-ரி

### அடுத்த கட்ட

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

நடத்துவதற்குத்தான் இரு தரப்பும் இணங்கியுள்ளோம். மூன்று கட்டப் பேச்சுவார்த்தைகளில் பேசிய விடயங்களை நடைமுறைக்குக் கொண்டுவந்த பின் அடுத்த கட்டப் பேச்சுக்களை நடத்தலாம்.

அடுத்த கட்டப் பேச்சுவார்த்தைகளை கொழும்பில் நடத்துவதற்கு அரசு தரப்புகுழுவினர் விரும்பினர். மூன்று கட்ட பேச்சுக்களில் மேற்கொள்ளப்பட்ட தீர்மானங்களுக்கு முடிவு கண்டபின் கொழும்பில் பேச்சுக்களை நடத்தலாமென்றும் அவர் கூறினர்.

-சி-ம-ரி

### அரசின் மீன்பிடி

(1ம் பக்கத் தொடர்ச்சி)

இதனை விடுத்து காலை 5 மணி முதல் மாலை 5 மணிவரை மட்டுமே அதுவும் 2 மைல் தூர பகுதியில் மட்டுமே மீன் பிடிக்கலாம் என அரசு அறிவித்துள்ளமையானது இந்த உடன்பாட்டை மீறும் செயலாகும். இதனை உடனடியாக கவனத்தில் கொண்டு உரிய நடவடிக்கை எடுக்கவேண்டும் எனவும் புலிகள் வலியுறுத்தினர்.

மேலும் உடன்பாடு காணப்பட்ட பகுதியை விட ஏனைய பகுதிகளில் மீனவர்கள் மீன் பிடிப்பர். அதை நீங்கள் தடுக்கமுடியாது. அவ்வாறு தடுப்பீர்களானல்அது மோதல் தவிர்ப்பு உடன்பாடு மீறலாகவே கருதப்படும் எனவும் புலிகள் தெளிவாகக் கூறியுள்ளனர்.

-சி

### 22 பொருட்கள்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

இராணுவப் பொருட்களைத் தவிர ஏனைய பொருட்கள் அனைத்தினதும் தடையை நீக்குமாறு புலிகள் தெரிவித்துள்ளனர்.

ஆயுதங்கள், வெடிமருந்துகள் ஆகியவற்றின் தடையை நீக்குமாறு புலிகள் கேட்கவில்லை. இவை தமக்குத் தேவையில்லையெனவும் புலிகள் தெரிவித்துள்ளனர். அவர்கள் அதை தயக்குத் தருமாறும் சேட்கவில்லை.

-சி-இ-ரி

### பூநகரி முகாம்

[1ம் பககத் தொடர்ச்சி]

பிரதிநிதிகள் வலியுறுத்தினர். அதற்கு அரச பிரதிநிதிகள், பூநகரி முகாமை அகற்ருமல் முகாமை 500 மீற்றர் அல்லது 800 மீற்றர் தூரத்திற்கு பின்நோக்கி நகர்த்தலாம் எனக் கூறினர்.

எனினும் புலிகள் இதனை ஏற்றுக்கொள்ளாது தமது நிலைப்பாட்டை வலியுறுத்திக் கூறினர். அதாவது யாழ். குடாவிற்கும் வன்னிப் பிரதேசத்திற்குமிடையிலான போக்குவரத்து பாதை புவியியல் ரீதியாக சிறியதொரு பிரதேசமே. இதற்குள் இராணுவம் விலகியிருப்பதும் அல்லது அதே இடத்தில் இருப்பதும் ஒன்றே. எனவே மக்கள் போக்குவரத்திற்காக படை முகாம் அகற்றப்படவேண்டுமென வலியுறுத்தினர்.

இதுபற்றி அடுத்த கட்டப் பேச்சில் தமது முடிவை அறிவிப்பதாக அரசு பிரதிநிதிகள் கூறியுள்ளனர். (சி-ரி)

### அரசு - புலிகள்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

வைத்து இவற்றுக்கெல்லாம் பரிகாரம் காணப்பட வேண்டுமென்ற நிலைப்பாட்டை எடுத்தார். நாங்களும் அதனை ஏற்றுக்கொண்டோம்.

இதனையே நேற்றைய பேச்சிலும் நாங்கள் வலியுறுத்தினேம். மூன்று கட்ட பேச்சுக்களில் பேசியும் பெரியளவில் எவ்வித முன்னேற்றமும் காணப்படவில்லை. பொருளாதாரத் தடைமுற்ருக நீக்கம், போக்குவரத்து பாதை திறப்பு பற்றியும் இதுவரை சரியாண முடிவு எதுவும் எட்டப்படாமலேயுள்ளது

இவைபற்றியெல்லாம் நேற்றைய பேச்சில் நாங்கள் மிக ஆணித்தரமாக கூறியுள்ளோம். இரண்டு மூன்று பொருட்கள் மீதானதடைகளை தளர்த்தி அதனை பெரிய பிரசாரத்திற்கு பயன்படுத்துகிறீர்களே தவிர எமது மக்களின் இன்றைய வாழ்க்கை நிலைமையை யதார்த்த நிலையை புரிந்துகொண்டு செயற்படுவதாக தெரியவில்லை

சி ரீ இ

### அரசு பிரதிநிதி

[1ம் பக்கத் தொடர்ச்சி)

அரசு தரப்புப் பிரதிநிதிகள் ஹெலிகொப்டர் மூலம் நேற்று மாலை கொழும்பு திரும்பினர். இவர்களை தமிழீழ விடுதலைப் புலிகள் வழி அனுப்பி வைத்தனர். (-சி-ம-ரி)

### கண்காணிப்புக்குழு

(1ம் பக்கத் தொடர்ச்சி)

வகிக்கும் குழு என்பதால் இருதரப்பினரையும் சந்தித்து அவர்களின் பிரச்னைகளை அறிந்த பின்பே அவர்கள் செயற்படத் தொடங்கவேண்டுமென புலிகள் சுட்டிக் காட்டியுள்ளனர் அரசின் பதில் கிடைத்ததும் கண்காணிப்புகுழு யாழ். வந்து புலிகளைச் சந்திப்பர் மோதல் தவிர்ப்பை 6 குழுக்கள் கண்காணிக்குமென முதலில் அறிவிக்கப்பட்டுள்ளபோது அதனை 4 குழுவாக அரசே குறைத்துள்ளது. இது பற்றி தமக்கு உத்தியோக பூர்மாக அறிவிக்கப்படவில்லை எனவும் புலிகள் தெரிவித்துள்ளனர்

சி-ரி

### பாதை திறப்பு

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

பாதையை பொதுமக்களின் போக்குவரத்திற்காக திறந்துவிடுமாறு வற்புறுத்தினேம். எனினும் இதுபற்றி தலைமைப் பீடத்துடன் கலந்தாலோசித்த பின்பே முடிவொன்றுக்கு வருவோம் எனவும் அடுத்த பேச்சின்போது இதுபற்றிய தங்கள் முடிவை கூறுவதாகவும் அரச பிரதிநிதிகள் உறுதியளித்துள்ளனர்.

முன்பிருந்த இராணுவ தலைமைப்பீடத்தினர் குடாநாட்டின் மீது பாரிய படையெடுப்பை மேற்க்கொள்ளும் தந்திரோபாயமாகவே போக்குவரத்து தடையை ஏற்படுத்தியிருந்தனர் எனவே நாம் மக்களுக்கு ஒரு நம்பிக்கையை ஏற்படுத்துவதற்காக, அதாவது பூநகரி இராணுவ முகாமை அகற்றி பாதையை திறக்குமாறு வலியுறுத்திக். கூறினேம். -சி-ரி


## தமிழ் மா மன்றம் நடாத்தும் பொங்கல் விழா

இடம்: அருள்மிகு கற்பகபிள்ளையார் கோவில் வீதி இருபாலை

காலம்: 15-01-1995 ஞாயிறு பி. ப. 6 மணிக்கு

மங்கள விளக்கேற்றல்
திரு. வே. வித்தியானந்தன்
(உரிமையாளர்: பாலாஜி பொத்தகசாலை)
வரவேற்புரை: திரு. க. முருகானந்தன்
தலைமையுரை: கவிஞர் இருவை க. ஜீவமோகன்
[அமைப்பாளர்)
தொடக்கவுரை: திரு. க. சிவகரன் (மன்றத் தலைவர்)
சிறப்புரை: திரு சோழன்
(கோப்பாய் வட்டவை பொறுப்பாளர்)
திரு. ஐயா சச்சிதானந்தம் (ஈழநாடு)
மூதறிஞர் ''சொக்கன்''
வாழ்த்துரை: தமிழருவி திரு. த. சிவகுமாரன்
(அமைப்பாளர் காரைநகர் கம்பன் கழகம்)
இசை, நடன நாடகங்களுடன்
விசேட நிகழ்ச்சியாக:
கவியரங்கம்:
''பொங்கிய தமிழில் சிந்து பாடுவோம்''
தலைவர்:- வே. ஞானகாந்தன் (பி. ஏ)
நல்லை அமுதன் எம். பி. அருளானந்தம்
ஐ. கேதீஸ்வரன், எஸ். தங்கராசா,
என். செல்வரத்தினம்,
பொன். தர்மேந்திரன், க. கீர்த்தி
பட்டிமன்றம்:-
நாமிருக்கும் நாடு நமதென்று உணர்ந்து விட்டோமா?
நடுவர்:-
வாகீச கலாநிதி கனக நாகேஸ்வரன் எம், ஏ.

| உணர்ந்து விடவில்லை | உணர்ந்து விட்டோம் |
|---|---|
| திரு. செ. நடேசகாந்தன் | திரு. க' ஜீவமோகன் |
| திரு. க சோதிதாசன் | திரு.எஸ். எஸ். சுரேன் |
| திரு. ஜெ. கோகலே | திரு. சூ. யேசுராசா |
| திரு. க, மோகனேசன் | திரு.கா. ஜெயராஜசிங்கம் |

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றேம்
விழா குழுவினர்
(எ-4698]


## புலிகளின் குரல் நிகழ்ச்சி நிரல்

1995—01—15
ஞாயிறு இரவு

08-01 இசையரங்கம் நிகழ்ச்சியில் ரி. எஸ். பிச்சையப்பா அவர்களின் முகவீணைக் கச்சேரி
08-30 செய்திகள்
08-40 தொடர் நாடகம் கருணைரவி எழுதும் ,,காணி நிலம் வேண்டும்'' அங்கம்-01
09-00 இரவு நிகழ்ச்சிகள் யாவும் நிவறவுபெறும்

1995—01—16
திங்கள் காலை

07-02 மாவீர வணக்கம்
07-17 தாயகப் பாடல்கள்
07-30 செய்திகள்
07-35 பத்திரிகை செய்திகள்
07-40 நீங்கள் கேட்டவை
08-00 காலை நிகழ்ச்சிகள் யாவும் நிறைவுபெறும்

## தமிழீழ வானெலி நிகழ்ச்சி நிரல்

1995—01—15
ஞாயிறு மாலை

05-01 சிந்தனைச் சிதறல்
05-02 எழுச்சி கீதம்
05-10 புதியவை
05-15 கணேசா நகையகத்தாரின் ஆதரவுடன் வழங்கும் பொங்கல் வாழ்த்து நிகழ்ச்சி
05-30 கதம்பம்
06-00 சிந்தனைக்குச் சில விஞடிகள்
06-02 வைகுந்தம் பல்பொருள் அரங்கின் ஆதரவுடன் வழங்கும் பொங்கல் வாழ்த்து நிகழ்ச்சி தொடர்ந்து காவேரி பட்டுச்சோலையின் ஆதரவுடன் வழங்கும் பொங்கல் வாழ்த்து நிகழ்ச்சி
06-30 மாலை நிகழ்ச்சிகள் யாவும் நிறைவுபெறும்

இப்பத்திரிகை ''ஈழநாடு'' லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம், சிவன்கோவில் மேற்கு வீதி, 63-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1995-ம் ஆண்டு ஜனவரி மாதம் 15-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Registered as a News Paper at the General Post Office SriLanka under Licence Number B/16336/B-